# புற்றுநோய் என்றால் என்ன?

## புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்காக

**புற்றுநோய் என்பது உடல் செல்களில் ஏற்படும் நோயாகும்.**

புற்றுநோய் என்பது உடல் செல்கள் பற்றிய நோயாகும். உடலானது பலகோடி செல்களினால் உருவாக்கப்பட்டது ஆகும். சாதாரண செல்கள் வளரும் அதன்பின் பிரியும் (இரண்டாகப் பிளவுபடும்). அவை இறக்கும்போது, புதிய செல்கள் உருவாகி அவற்றை ஈடு செய்யும்.

சில சமயங்களில், சில செல்களில் தவறு ஏதாவது ஏற்பட்டு அவை இறப்பதில்லை. அவை கட்டுப்பாடின்றி பிரிந்து ஒரு கட்டியாக (கழலை) வளர ஆரம்பிக்கலாம். அதுதான் புற்றுநோய் என்று அழைக்கப்படுகிறது.

புற்றுநோய்கள் உடலில் எங்கு வேண்டுமானாலும் உருவாகலாம். நூற்றுக்கு மேற்பட்ட வகையான புற்றுநோய்கள் உண்டு. குடல் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், புராஸ்டேட் புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய் போன்ற சிலவகைப் புற்றுநோய்கள், பொதுவாக இதர வகைகளைவிட அதிக அளவில் காணப்படுகின்றன.

- புற்றுநோய் சர்வ சாதாரணமாக உள்ளது - மூன்றில் ஒருவர் புற்றுநோய்க்கு ஆளாகின்றனர்.
- பெரும்பாலானோர் புற்றுநோயிலிருந்து பிழைத்தெழுகின்றனர்.
- சிகிச்சையின்றி புற்றுநோய் குணமாவதில்லை.

**The beginnings of cancer**




**புற்றுசார்ந்த மற்றும் புற்றுசாராத** கட்டிகள் *புற்றுசாராமலோ* (கடுமையில்லாதது) *அல்லது புற்றுசார்ந்தோ* (வீரியமிக்கது) இருக்கலாம்

*புற்றுசாராக் கட்டிகள்* உடலின் மற்ற பாகங்களுக்குப் பரவுவதில்லை. இருப்பினும் மருத்துவர் அவற்றைக் கண்காணிக்க வேண்டும்.

*புற்றுசார்க் கட்டி* எங்கு தொடங்கியதோ அங்கிருந்து உடலின் மற்ற பாகங்களுக்கு பரவக்கூடும். அது கட்டிக்கு அருகில் இருக்கும் திசுக்களுக்குப் பரவி அதன்பின் இரத்தம் அல்லது நிணநீர் வழியாக உடலின் மற்ற பாகங்களுக்கு எடுத்துச் செல்லப்படும். புதிய இடத்துக்குப் பரவுகின்ற புற்றுநோய் 'இரண்டாம் நிலைப் புற்றுநோய்' அல்லது 'மெடாஸ்டாசிஸ்' என்று அழைக்கப்படுகிறது.

**உங்களுக்குப் புற்றுநோய் எவ்வாறு ஏற்படுகிறது?**
புற்றுநோய் யாருக்கும் வரலாம். பெரும்பாலான புற்றுநோய்கள் வருவதற்கான காரணம் நமக்குத் தெரியாது.

சில காரணிகள் மக்களைப் புற்றுநோய் வருவதற்கான பெரும் அபாயத்துக்கு உள்ளாக்குகின்றன:

- முதுமையடைதல்: இளைஞர்களுக்குப் புற்றுநோய் வரலாம். ஆனால் பெரும்பாலான வகைப் புற்றுநோய்கள் 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குச் சர்வ சாதாரணமாக உள்ளது
- புகை பிடித்தல்
- அதிக அளவு மது அருந்துதல்
- உடற்பயிற்சியின்மை
- அதிக அளவு சூரியவெளிச்சத்துக்கு ஆட்படுதல்
- சத்தான உணவு உட்கொள்ளாமை
- உடல் பருமனாதல்
- குடும்ப வரலாறு. இது சிறிய அளவிலான குடும்பங்களை மட்டும் பாதிக்கிறது.

சில இரசாயனங்கள் மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் போன்றவை ஒரு நபருக்குப் புற்றுநோயால் பாதிக்கப்படும் அபாயத்தை அதிகரிக்கிறது.

உடலுறவின் மூலம் பரவும் மிகச் சாதாரணமான வைரஸான மனித பாபிலோமா வைரஸ் போன்ற சில நச்சுயிரிகள் (வைரஸ்) சில சமயங்களில் புற்றுநோயை உண்டாக்கும்.

**புற்றுநோய் மற்றவர்களிடமிருந்து உங்களுக்குப் பரவ முடியுமா?**
இல்லை. புற்றுநோய் தொற்றுநோய் அல்ல. புற்றுநோய் உள்ள ஒருவரிடமிருந்து இன்னொருவர் அதைப் பெற முடியாது.

புற்றுநோய் பாதிக்கப்பட்டவருடன் இருப்பதில் எவ்வித பயமுமில்லை. அது பாதுகாப்பானதுதான். புற்றுநோயால் பாதிக்கப்பட்டவரைத் தொடுவதிலும் பயம் எதுவுமில்லை பாதுகாப்பானதுதான்.

**புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டுபிடிப்பது**
பல புற்றுநோய்கள் மருத்துவரால் ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டு, கையாளப்பட்டால், வெற்றிகரமாக சிகிச்சை அளிக்க முடியும்.

பரிசோதனைத் திட்டங்களுக்குச் செல்லுங்கள். மார்பகம், குடல் மற்றும் கருப்பைவாய் புற்றுநோய் போன்றவைகளுக்குப் பரிசோதனை செய்வது உயிர்களைப் பாதுகாக்கும்.

உங்கள் உடலுக்கு எது இயற்கையானது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் பின்வரும் அசாதாரண மாற்றங்களைக் கண்டுகொள்ள நேரிட்டால், உடனடியாக உங்கள் மருத்துவரைக் காணவும்:

- கட்டிகள், அழற்சி அல்லது ஆறாத புண்கள்
- அசாதாரணமாக மார்பகத்தில் மாற்றங்கள்: கட்டிகள், கட்டிப்பொதிகள், கடினமான ஒரு பகுதி, அசாதாரணமாக மார்புக் காம்பிலிருந்து வடிதல், உள்நோக்கி வளைந்துள்ள (எப்போதும் அதைப்போல இல்லாமலிருந்தால்), வடிவம் அல்லது நிறம் மாறியுள்ள அல்லது அசாதாரண வலியுற்ற மார்புக் காம்பு
- இடைவிடாத இருமல், மூச்சுத்திணறல் அல்லது தொண்டைக் கரகரப்பு
- காரணமில்லாத எடைக்குறைவு அல்லது இரத்த இழப்பு
- தொடர்ந்த குமட்டல் அல்லது வாந்தி
- பெண்களுக்குப் பிறப்புறுப்பிலிருந்து இரத்தம் வருதல் - அது மாதவிலக்கு நாட்களுக்கு இடையில் அல்லது மெனோபாஸ் காலத்துக்குப் பிறகு, ஓரிரு துளிகளாகவே இருந்தாலும்...
- வடிவம், அளவு அல்லது நிறம் மாறிய மச்சங்கள் அல்லது இரத்தம் வழியும் மச்சங்கள்
- குடல் கழிவில் (மலம்) இரத்தம்
- நீடித்த அல்லது காரணமில்லாமல் வயிற்றுப்போக்கு அல்லது மலச்சிக்கல்
- உடலின் ஏதோ ஒரு பாகத்தில் குறையாத வலி

இந்த அறிகுறிகளில் சில, புற்றுநோய் அல்லாத சாதாரண சுகாதாரப் பிரச்சினையின் காரணமாகவும் இருக்கலாம்.

**உங்கள் உடலில் ஏற்படும் எந்தவித நீடித்த அறிகுறிகளுக்கோ, மாற்றங்களுக்கோ மருத்துவரைப் பார்க்கவும்.**

**எனக்கு புற்றுநோய் ஏற்பட்டால் என்ன ஆகும்?**
புற்றுநோய் என்ன வகை மற்றும் எத்தகைய நிலை (எவ்வளவு முற்றிய நிலையில் அது இருக்கிறது) என்பதைப் பொறுத்து சிகிச்சை இருக்கும். கீமோதெராபி சிகிச்சை, கதிரியக்கச் சிகிச்சை, அறுவைச் சிகிச்சை, நோய்த் தடுப்பாற்றல் சிகிச்சை போன்றவை மிகப் பொதுவான சிகிச்சைகள் ஆகும்.

மருத்துவர் புற்றுநோயைக் குணப்படுத்தவோ, கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளவோ உதவும் வகையில் சிகிச்சையைப் பற்றி ஆலோசிப்பார்.

**ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்படும் புற்றுநோய்கள் பெரும்பாலும் குணப்படுத்தப்படுகின்றன.**

**Multilingual Cancer Information Line (பன்மொழி புற்றுநோய்த் தகவல் இணைப்பு)** அழைப்பாளர்களுக்கு புற்றுநோயைப் பற்றிய தகவல்களை அவர்களுடைய மொழியிலேயே வழங்குகிறது. **13 14 50** என்ற எண்ணில் Cancer Council Victoria Helpline (விக்டோரியப் புற்றுநோய்க் கழக உதவி இணைப்பை) அழைத்து, புற்றுநோய்த் தாதியுடன் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரின் உதவியுடன் அந்தரங்கமாக பேசவேண்டுமெனக் கேளுங்கள்.

ஆங்கிலத்தில் தகவல்கள் மற்றும் ஆதரவுக்கு **13 11 20** என்ற எண்ணில் அழைக்கவும்.

**கடைசியாகப் புதிப்பிக்கப்பட்டது:** நவம்பர் 2011

Cancer Council Helpline 13 11 20 www.cancervic.org.au